**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 395/2025 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ஜெர்மினாள் | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 2024ம் வருடம் நான் சுனாமி காலணிக்கு சென்று பொருட்கள் வாங்கிவிட்டு வந்தபோது எனது கழுத்தில் கிடந்த தங்க தாலிச் செயினை யாரோ பறித்துச் சென்றுவிட்டார்கள். சம்பவம் சம்மந்தமாக நான் சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது புகார் மனுக் கொடுத்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு சந்தேகத்தின் அடிப்படையில் நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** களவு போன செயினை போலீசார் கிடைத்துவிட்டதாக கூறியதின் பேரில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். **அந்த லாக்கெட் மற்றும் எஸ் வடிவ கொக்கியுடன் கூடிய தங்க தாலிச் செயின் துண்டு அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்படி சம்பவத்திற்கு பிறகு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது தவறு இல்லை என தெரிய வந்ததால் நாங்கள் ராசியாகி சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம்**

**வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154–ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. நானும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். **மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

2. கடந்த 25.10.2024ம் தேதி 20.00 மணியளவில் குளச்சல் சுனாமி காலணிக்குச் சென்று பொருட்கள் வாங்கிவிட்டு கொட்டில்பாடு ரேசன் கடை அருகில் வந்தபோது குற்றம் சுமத்தப்பட்ட நபர்TN 74.AH.5904என்ற Honda Activa இருசக்கர வாகனத்தில் வந்து எனது கழுத்தில் கிடந்த சுமார் 11 பவுன் தங்க தாலிச் செயினை பிடித்து பறித்து சென்றுவிட்டார் என்றும் சம்பவம் சம்மந்தமாக நான் புகார் மனுக்கொடுத்தேன் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் சமாதானமாகிவிட்டதால் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 395/2025 P.W. 2 Additional witnesses**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜ்மோகன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது குளச்சல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த தனிஸ் லியோண் மற்றும் ஆய்வாளர் ராமச்சந்திரன் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.10.2024ம் தேதி 22.00 மணிக்கு உதவி ஆய்வாளர் நிலையப்பொறுப்பில் இருந்த போது ஜெர்மினாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 300/2024 சட்டப்பிரிவு 309(4) BNS 2023ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 26.10.2024 ம் தேதி காலை 06.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார்.

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை 26.10.2024ம் தேதி காலை 07.45 மணிக்கு கைதுச் செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவுச் செய்துள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் சகிதம் சொத்துக்களுடன் நீதிமன்ற

காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டபகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆகும். சான்று பொருட்கள் அ.சா.பொ. 2 முதல் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** காயம்பட்ட சாட்சி 1க்கு சிகிட்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 6 முதல் 10 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.